**லக்கல – பல்லேகம பிரதேச சபை**

**மாத்தளை மாவட்டம்**

------------------------------------

1. நிதிக் கூற்றுக்கள்

------------------------------

1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

----------------------------------------------------

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2014 மே 22 திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2013 ஏப்ரல் 04 திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2014 செப்டம்பர் 09 திகதி சபையின் தலைவருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

1.2 அபிப்பிராயம்

-------------------

தலைவருக்கு அனுப்பப்பட்ட இவ்வறிக்கையின்1.3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கங்கள் தவிர, நிதிக் கூற்றுக்களின் 2013 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு லக்கல பல்லேகம பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அவற்றின் நிதிச் செயற்பாடுகள் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமை ஒன்றினை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

-------------------------------------------------------------

1.3.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணக்கமின்மை

---------------------------------------------------------------------------------------------------------

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

1.3.2 கணக்கீட்டு கொள்கைகள்

-------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கும் போது கடைபிடிக்கப்பட்டிருந்த கணக்கீட்டு கொள்கைகள் நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) களஞ்சிய முற்பணக் கணக்கு முறைமையினை கடைபிடிக்கப்படாமல் கொள்வனவு செய்யப்படும் களஞ்சிய இருப்புக்கள் நேரடியாக செலவுத்தலைப்புக்களுக்கு வரவு வைக்கப்பட்டிருந்தன.

1.3.3 கணக்கீட்டு குறைபாடுக்கள்

---------------------------------------

பின்வரும் கணக்கீட்டு குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு 04 வருமான விடயங்களின் கீழ் பெற வேண்டிய ரூபா 83,894 இற்கான வருமானம் மற்றும் உள்நாட்டுக் கடன் அபிவிருத்தி நிதியத்திற்கு மற்றும் ஓய்வூதிய நிதியத்திற்கு செலுத்த வேண்டிய ரூபா 70,983 தொகையினை கணக்கீடு செய்திருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்களில் கணக்காய்வுக் கட்டணத்திற்காக ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டின் போது சபையினால் இரத்துச் செய்யப்பட காசோலைகள், மிகை கொடுப்பனவுகள், மீளப்பெறல் மற்றும் நட்டங்கள் தொடர்பாக 05 சந்தர்பங்களின் அறவிடப்பட்டிருந்த கூட்டுத்தொகை ரூபா 175,804 இற்கான தொகையினை ஏனைய வருமானங்களின் கீழ் கணக்கீடு செய்திருந்த போதும், அது தொடர்பாக கவனம் செலுத்தாமல் அத்தொகையை கிடைக்க வேண்டிய மீதி ஒன்றென நடைமுறை சொத்துக்களின் கீழ் காட்டப்பட்டிருந்தன.

(ஈ) சபையின் அதிகாரப் பிரதேசத்தில் மகநெகும இன் கீழ் செயற்படுத்தப்பட்ட 08 நிர்மாண வேலைகளுக்காக சபைக்குக் கிடைக்க வேண்டிய மற்றும் சபையினால் ஒப்பந்தககாரர்களுக்கு செலுத்த வேண்டியிருந்த ரூபா 4,000,000 தொகையினை ரூபா 400,000 தொகை என கணக்கீடு செய்யப்பட்டுள்ளமையால் கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர் கணக்குகளில் ரூபா 3,600,000 இனால் குறைவாக காட்டப்பட்டிருந்தது.

(உ) மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு மடுமான நீர் செயற்திட்டம் தொடர்பான கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர் மீதிகள் ரூபா 16,890 இனால் குறைவாக காட்டப்பட்டிருந்தது.

(ஊ) நிதி நிலைமை பற்றிய கூற்றில் குறிப்பு இலக்கம் 11 இன் பிரகாரம் காசு மற்றும் காசுக்கு சமமானவைகளின் பெறுமதி ரூபா 71,833 இற்கான மறை மீதி ஒன்று காணப்பட்டபோதும் அதனை சார்பான மீதி ஒன்றென நடைமுறை சொத்துக்களில் கணக்கீடு செய்யப்பட்டுள்ளமையால் நடைமுறை சொத்துக்கள் ரூபா 143,667 இனால் மிகையாகக் காட்டப்பட்டிருந்தது.

(எ) ஆதனங்கள் பொறித் தொகுதி மற்றும் உபகரணக் கணக்கில் மீதி மற்றும் மூலதன ஈடுபடுத்தலுக்காக வருமானத்தின் பங்களிப்பு கணக்கு மீதி இடையே ரூபா 4,146,848 இற்கான வித்தியாசம் ஒன்று காணப்பட்டது.

(ஏ) மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்களுடன் காசுப் பாய்ச்சல் கூற்றொன்று மற்றும் தேறிய சொத்துக்களின் முரண்களுக்கான கூற்று சமர்பிக்கப்பட்டிருக்கவில்லை.

1.3.4 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

--------------------------------------------------------------------------------

நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள கூட்டுத்தொகை ரூபா 14,815,197 இற்கான 13 கணக்கு விடயங்கள் தொடர்பாக குறிப்பிட்ட மீதிகள் மற்றும் பொருத்தமான துனைப் பதிவேடுகள் மற்றும் அறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள மீதிகளிடையே அவதானிக்கப்பட்ட சமனற்ற தன்மைகளின் கூட்டுத்தொகை ரூபா 18,216,911 ஆகும்.

1.3.5 தொங்கல் கணக்குகள்

முன்னைய ஆண்டு இறுதியில் உள்ளவாறு ரூபா 1,838,725 இற்கான செலவு மீதிக்கு மீளாய்வாண்டின் போது மேலும் ரூபா 4,144 செலவு வைக்கப்பட்டு ஆண்டு இறுதியில் உள்ள மீதி ரூபா 1,842,869 தொகை என காட்டப்பட்டிருந்த போதும், அம் மீதிகளை இனங்கண்டு தீர்ப்பதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

1.3.6 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) பெற வேண்டிய கணக்கு மீதிகள்

2013 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பெறவேண்டிய கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 4,192,396 ஆக காணப்பட்டதுடன், அம் மீதிகளில் அடங்கியுள்ள ஒரு வருட காலத்தை விஞ்சியுள்ள மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 715,131 ஆகும்.

(ஆ) செலுத்த வேண்டிய கணக்கு மீதிகள்

2013 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு செலுத்த வேண்டிய கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 5,819,551 ஆக காணப்பட்டதுடன், அந்த மீதியில் அடங்கியுள்ள ஒரு வருட காலத்தை விஞ்சியுள்ள மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 1,933,932 ஆகும. அதில் 3 வருட காலத்தை விஞ்சிய ரூபா 277,257 இற்கான மீதியும் அடங்கியுள்ளது.

1.3.7 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

தேவையான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்பிக்கப்படாமையால் நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள 09 கணக்கு விடயங்கள் தொடர்புடைய கூட்டுத்தொகை ரூபா 5,000,066 இற்கான கொடுக்கல் வாங்கல்கள் கணக்காய்வின் போது திருப்திகரமான சான்றுறுதி செய்வதற்கு முடியாதுள்ளது.

1.3.8 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுக்கு இணக்கமின்மைகள்

கீழே விவரிக்கப்பட்டுள்ள இணக்கமின்மைகள் சந்தர்ப்பங்கள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

| சட்டங்கள், விதிகள் பிரமாணங்களுடன் தொடர்பு | இணக்கமின்மைகள் |
| --- | --- |
| (அ) 1987 இன்15 பிரதேச சபை சட்டம் | |
| (i) பிரிவு 170 | தலைவரின் அங்கீகாரத்தை பெறாமல் மீளாய்வாண்டின் போது 11 சந்தர்ப்பங்களில் ரூபா 1,100,800 தொகையொன்று செலவுத் தலைப்புக்களிடையே மாற்றப்பட்டிருந்தது. |

| | | |
|---|---|---|
| (ii) | பிரிவு 175 (1) | உள்ளூராட்சி ஆணையாரின் தீர்மானம் ஒன்று எடுக்காமல் அமைய, பிரதியீட்டு மற்றும் நாளாந்த அடிப்படையில் சேவையில் ஈடுபட்டிருந்த 12 ஊழியர்களுக்கு ரூபா 1,420,400 இற்கான சம்பளம் மற்றும் படிகள் செலுத்தப்பட்டிருந்தன. |
| (M) | தாபனக் கோவையின் அத்தியாயம் ஓஓஜஜ பிரிவு 4.5 | கடன் கொடுப்பனவுகளை செலுத்தத் தவறிய மூன்று ஊழியர்களிடம் அறவிடப்பட வேண்டியிருந்த கூட்டுதொகை ரூபா 133,695 இற்கான கடன் மீதிகளை பிணையாளரிடம் அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| (இ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப்பிரமாணங்களின் கோவை | |
| (i) | நிதப் பிரமாணம் 261(3) | குறிப்பிட்ட ஏற்பாடுகளுக்கு இணக்கமின்றி காசோலைகள் வழங்கப்பட்டுள்ளமையால் வருட இறுதியில் உள்ளவாறு காசேட்டில் ரூபா 71,900 இற்கான மறை மீதியொன்று ஏற்பட்டுள்ளது. |
| (ii) | நிதிப் பிரமாணம் 395 | திசெம்பர் மாதத்திற்கான வங்கி இணக்கக் கூற்றின் பிரகாரம் ஒரு வருடத்தை மிகைத்த காலம் இனங் காணப்படாத கூட்டுத்தொகை ரூபா 19,222 இற்கான 05 மீதிகளை தீர்ப்பதற்காக நடவடிக்கைகள் எடுத்திருக்கவில்லை. |
| (iii) | நிதிப் பிரமாணம் 756 | 2014 மே 31 வரை மீளாய்வாண்டிற்கான வருடாந்த பண்டக் கணிப்பீடு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |

1.3.9 போதியளவு அதிகாரத்தினால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

1997 மே மாதம் முதல் 2012 அக்டோபர் மாதம் வரை காலப்பகுதி தொடர்பாக ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கான பங்களிப்பு தொகை அனுப்பியதற்கான குறிப்பிட்ட அறிக்கைகள் அனுப்பப்படாமையால் ரூபா 5,533 மிகை விதிப்பு ஒன்றினை சபை நிதியத்தில் இருந்து செலுத்துவதற்கு நேரிட்டுள்ளது.

## 2 நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2013 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் வருமானத்தை விஞ்சிய செலவுகள் ரூபா 2,643,943 ஆக காணப்பட்டதுடன், அதற்கு நேர்மாறாக முன்னைய ஆண்டின் செலவுகளை மிகைத்த வருமானம் ரூபா 2,924,092 ஆகும். முன்னைய ஆண்டுடன் ஒப்பீடு செய்யும் போது மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 5,568,035 இற்கான வீழ்ச்சி ஒன்று காணப்பட்டது.

(ஆ) நிகழ்ச்சித் திட்டங்களின் பிரகாரம் வருமானம் மற்றும் செலவுகள் ஒப்பீடு செய்யும் போது இலக்கம் 01, 04 மற்றும் 05 கொண்ட நிகழ்ச்சித் திட்டங்கள் தவிர ஏனைய நிகழ்ச்சித் திட்டங்கள் 03 இலும் வருமானத்தை விஞ்சிய செலவுகள் காணப்பட்டன.

2.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

---------------------------------------------------

2012 ஆண்டை விட மீளாய்வாண்டின் போது தொழிற்படு மூலதனம் குறைந்திருந்ததுடன் நடைமுறை பொறுப்புக்களை மேவகை செய்வதற்காக ஏற்ற விதமாக நடைமுறை சொத்துக்கள் காணப்பட்ட போதும் அவை போதிய மட்டத்தில் காணப்படவில்லை என அவதானிக்கப்பட்டது.

2.3 வருமான நிருவாகம்

-----------------------------

வருமானம் சேகரிக்கும் செயலாற்றுகை

---------------------------------------------------------

கீழே காட்டப்பட்டுள்ள விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) வாடகை

------------

மீளாய்வாண்டு ஆரம்பத்தில் உள்ளவாறு நிலுவை வாடகை மற்றும் ஆண்டிற்கான பில் போடப்பட்ட வருமானத்துடன் சேகரிக்கப் பட வேண்டிய வருமானம் ரூபா 1,607,182 தொகை எனினும், அவற்றில் அறவீடு செய்துள்ள தொகை ரூபா 805,047 எனப்படும் நூற்றிற்கு 50 மாத்திரமே.

(அ) நீர்க்கட்டணம்

-------------------

மீளாய்வாண்டு ஆரம்பத்தில் உள்ளவாறு நிலுவை நீர்க் கட்டணம் மற்றும் ஆண்டிற்கான பில் போடப்பட்ட வருமானத்துடன் சேகரிக்க வேண்டிய வருமானம் ரூபா 952,965 எனினும் அவற்றில் அறவிடப்பட்டிருந்தது, ரூபா 528,608 எனப்படும் நூற்றிற்கு 55 மாத்திரமே.

3 செயற்பாட்டு மீளாய்வு

--------------------------------

3.1 செயற்பாட்டுத் திறமையின்மை

-----------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) சபைக்கு சொந்தமான பொலரோ இனத்தை சேர்ந்த வாகனம் ரூபா 265,425 செலவிடப்பட்டு திருத்த வேலைகள் மேற்கொள்ளப்பட்டு இருந்தன எனினும் அதற்கான கொள்வனவு வழிகாட்டல் கோவையின் பிரிவு 9:3:1 (அ) இன் பிரகாரம் அமைச்சுச் செயலாளரின் அங்கீகாரம் பெற்றிருக்கவில்லை. அதே போல் திருத்த வேலைகள் திருப்திகரமாக நடைபெற்றுள்ளன என உறுதிப்படுத்தும் பொறியியலாளர் சான்றிதழ் இன்றி கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(ஆ) கூறுவிலைக்ள கோறப்பட்டு கராஜ் ஒன்று தெரிவு செய்யப்படாமல் மீளாய்வாண்டின் போது ரூபா 98,700 செலவிடப்பட்டு கப் வண்டி ஒன்று திருத்த வேலை மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டு இறுதி வரை சபையினால் நட்டத்திற்காக பயன்படுத்தப்படும் கப் வண்டி, 02 மோட்டார் சைக்கிள்கள் மற்றும் குபேடோ டிரக்டரின் உரிமையை சபைக்கு உரித்தாக்குவதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஈ) மீளாய்வாண்டிற்கான வருமான அனுமதிப்பத்திரம் பெற்றுக் கொள்ளாமல் சபைக்கு சொந்தமான 02 டிரக்டர்கள் மற்றும் ஜிப் வண்டி என்பன ஓட்டத்திற்காக பயன்படுததப்பட்டிருந்தது. அத்துடன், டிரக்டர் மற்றும் டேலருக்கு காப்புறுதி மேவகை பெற்றிருக்கவில்லை.

(உ) மீளாய்வாண்டிற்கான சபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி 42 எனினும் அவற்றில் 20 வெற்றிடங்கள் காணப்படல் மற்றும் தகைமைகளை பூர்த்தி செய்திருந்த செயலாளர் ஒருவரை நியமனம் செய்யாமையின் காரணமாக சபையின் விடயங்களை செயற்திறனுடன் மேற் கொள்வது தொடரபாக பாதகமான தாக்கங்கள் ஏற்பட்டிருந்தது.

(ஊ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் பிரிவு 52 இன் பிரகாரம் 11 அங்கீகாரமின்றிய நிரமாண வேலைகள் தொடர்பாக சபையினால் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(எ) 1993 செப்டம்பர் 03 திகதிற்கு முன்னர் ஓய்வு பெற்றிருந்த ஊழியர்களுக்காக உள்ளுராட்சி சேவை ஓய்வூதிய நிதியத்திற்கு தொடர்ச்சியாக பங்களிப்பு தொகை செலுத்தப்படாமையால் மீளாய்வாண்டு இறுதியளவில் செலுத்தப் படவேண்டிய மீதி ரூபா 2,003,715 இற்கான உயர் பெறுமதி ஒன்று ஆகியிருந்தது.

3.2 பயன்படுத்தபடாத மற்றும் குறைபயன்பாட்டுச் சொத்துக்கள்

-----------------------------------------------------------------------------------------

கூட்டு பெறுமதி ரூபா 664,300 இற்கான சொத்துக்கள் 03 அலகுகள் மற்றும் பெறுமதியின் கணக்கிடப்படாத சொத்துக்கள் 04 அலகுகள் என்பன பயன்படுத்தப்படாமல் மற்றும் குறைபயன்பாட்டுடன் நான்கு வருடங்களை விட கூடிய காலம் காணப்பட்டது.

3.3 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

---------------------------------------------------------

ஜாதிக சவிய மகநெகும செயற்திட்டத்தன் கீழ் ரூபா 1,400,000 செலவில் 2011 திசெம்பர் 29 ஆந் திகதி வேலை பூர்த்தி செய்ப்பட்டிருந்த கிவுலேவாடிய நீர் செயற்திட்டம் மீளாய்வாண்டு இறுதி வரை நீர் இன்மையால் செயற்படாத நிலைமையில் காணப்பட்டது.

3.4 ஒப்பந்த நிருவாகம்

----------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டின் போது சபையினால் வழங்கப்பட்டிருந்த 07 ஒப்பந்த வேலைகள் தொடர்பாக கூட்டுத்தொகை ரூபா 3,496,500 இற்கான கொடுப்பனவு மேற்கொள்ளும் போது ஒப்பந்த வேலைக்காக உடன்படிக்கை மேற்கொண்டிருந்த சமூர்த்தி சங்கத்தின் செயலாளரின் பெயரில் காசோலை எழுதப்படாமல், அப் பிரதேச சமூர்த்தி வங்கியின் முகாமையாளரின் பெயரில் காசோலை எழுதப்பட்டு வழங்கப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் போது சபையினால் மேற்கொள்ளப்பட்ட நிர்மாண வேலைகள் தொடர்பாக மதிப்பீடுகள் தயாரித்தல், அளவை அறிக்கைகள் பெற்றுக் கொள்ளல், பரிசோதனை மேற்கொள்ளல், கொடுப்பனவுகளை விதந்துரைத்தல் ஆகிய அனைத்து கருமங்களும் சபையின் தொழில்நுட்ப அலுவலரினால் மாத்திரம் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டின் போது சபையினால் மகநெகும செயற்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட 07 நிர்மாண வேலைகள் தொடர்பாக தடுத்து வைத்தல் பணம் வைத்துக் கொள்ளாமல் முழுத் தொகையும் விடுவிக்கப்பட்டிருந்தது.

3.5 திண்ம கழிவுப் பொருள் முகாமைத்துவம்

----------------------------------------------------------------

சபையின் அதிகாரப் பிரதேசத்தில் குப்பைகளை அகற்றுவதற்காக முறையான நடைமுறையொன்று அமுல் நடத்தியிருக்கவில்லை. அத்துடன் சேகரிக்கப்படும் கழிவுப் பொருட்களை வகைப்படுத்தப்படாமல் சபையின் டிரக்டர் ஒன்றினை பயன்படுத்தி பலகொல்லயாய பிரதேசத்தில் காணப்படும் திறந்த தரைப் பகுதியொன்றில் போடப்பட்டிருந்தது. குப்பை மீள்சுழற்சி நிகழ்ச்சித் திட்டம் ஒன்று தொடர்பாக சபையின் கவனம் செலுத்தப்பட வேண்டும் என கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.

4 கணக்கு நடவடிக்கை தன்மை மற்றும் நல்லாட்சி

---------------------------------------------------------------------------

4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

------------------------------

மீளாய்வாண்டிற்கான பாதீட்டில் 12 வருமானத் தலைப்புகளின் கீழ் ரூபா 4,908,468 தொகையான வருமானம் உழைப்பதற்காக மதிப்பீடு செய்யப்பட்டிருந்த போதும் அவற்றில் வருமானம் ஏதும் உழைத்திருக்கவில்லை. மேலும் 3 வருமானத் தலைப்புக்களில் அறவீடுகள் நூற்றிற்கு 10 உம் நூற்றிற்கு 35 இற்கும் இடையிலான மட்டத்தில் காணப்பட்டமையால் பாதீடு பயன்தரு நிதிக் கட்டுப்பாட்டு கருவி ஒன்றாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

4.2 தீர்க்கப்படாதிருந்த மற்றும் பதில் அளிக்கப்படாத கணக்காய்வு ஐயவினாக்கள்

------------------------------------------------------------------------------------------------------------------------

மீளாய்வாண்டு இறுதி வரை சபைக்கு அனுப்பியிருந்த கணக்காய்வு ஐயவினாக்களில் 08 இற்கான பதில் அனுப்பியிருக்கவில்லை. அவ் ஐயவினாக்களுடன் தொடர்புடைய கணக்கிடக் கூடிய கொடுக்கல் வாங்கல்களின் பெறுமதி ரூபா 542,706 ஆகும்.

5 முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

----------------------------------------------------

பின்வரும் முறைமைகள் கட்டுப்பாட்டு பகுதிகள் தொடர்பாக விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) பாதீட்டுக் கட்டுப்பாடு

(ஆ) நிலுவை வருமானம் அறவீடு செய்தல்

(இ) கடன்பட்டோர், கடன் கொடுத்தோர் கட்டுப்பாடு

(ஈ) நிதிக் கட்டுப்பாடு

(உ) களஞ்சியக் கட்டுப்பாடு